### காலணி – தோல் பொருட்கள் உற்பத்தி – பதனிடுதல்

# தொழிலாளர்களுக்கான நல வாரிய சிறப்பு முகாம்!

## நெல்லிக்குப்பம் புகழேந்தி பங்கேற்பு!

வேலூர், நவ. 10

வேலூர், ராணிப்பேட்டை மற்றும் திருப்பத்துார் மாவட்டங்களில் பணிபுரியும் காலணி, தோல்பொருட்கள் உற்பத்தி மற்றும் தோல் பதனிடுதல் தொழிலாளர்களின் பணி நிலைமைகள் மற்றும் அந்த தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் வாரிய பலன்கள் குறித்த ஆலோசனைக் கூட்டம், தொழிலாளர் உதவி கமிஷனர் (சமூக பாதுகாப்பு திட்டம்), வேலூர் அலுவலகத்தில் நேற்று நடந்தது.

இதில், தமிழ்நாடு காலணி மற்றும் தோல் பொருட்கள் உற்பத்தி மற்றும் தோல் பதனிடுதல் தொழி லாளர்கள் நலவாரிய தலைவரும், முன்னாள் எம்.எல்.ஏ.வுமான நெல்லிக்குப்பம் புகழேந்தி சிறப்பு விருந் தினராக பங்கேற்று, சிறப்பு முகாம் மூலமாக பதிவு செய்த 81 தொழிலாளர்களுக்கு அடையாள அட்டை கள் வழங்கி பேசியதாவது: தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டிய நலத்திட்ட உதவிகளை விரைந்து வழங்கவும், தகுதியுள்ள புதிய தொழிலாளர்களை வாரியத்தில் சேர்க்க சிறப்பு மற்றும் விழிப்புணர்வு முகாம்கள் தொடர்ந்து நடத்தவும், அதிக தொழிலாளர்களை வாரியத்தில் பதிவு செய்யவும் நட வடிக்கை எடுக்க வேண்டும். வேலூர், ராணிப்பேட்டை மற்றும் திருப்பத்துார் மாவட்டங்களில் தமிழ்நாடு காலணி மற்றும் தோல் பொருட்கள் உற்பத்தி மற்றும் தோல் பதனிடுதல் தொழிலாளர்கள் நலவாரி யத்தில் மொத்தம் 3 ஆயிரத்து 33 தொழிலாளர்கள் பதிவு செய்துள்ளனர். இதில், ஆயிரத்து 182 பேருக்கு 23 லட்சத்து 76 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு காலணி மற்றும் தோல் பொருட்கள் உற்பத்தி மற்றும் தோல் பதனிடுதல் தொழிலாளர்களுக்கு என தனியாக நலவாரியம் உருவாக்கி செயல்பட்டு வருகிறது.

இந்த தொழிலில் ஈடுபடும் 18 முதல் 60 வயது வரையுள்ள தொழிலாளர்கள், தமிழ்நாடு காலணி மற்றும் தோல் பொருட்கள் உற்பத்தி மற்றும் தோல் பதனிடுதல் தொழி லாளர்கள் நலவாரியத்தில் ஆன்லைன் மூலம் கட்டணமின்றி பதிவு செய்யவும், 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை கட்டணமின்றி புதுப்பிக்கவும் அரசு வழிவகை செய்துள்ளது. பதிவு செய்த உறுப்பினர்களுக்கு திருமணம், மகப்பேறு, கல்வி, கண் கண்ணாடி, ஓய்வூதியம், இயற்கை மரணம் மற்றும் விபத்து மரணம் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உத வித்தொகைகள் வழங்கப்பட்டு வரு கிறது. இவ்வாறு அவர் பேசினார். கூட்டத்தில், வாரிய உறுப்பினர் கலைநேசன், தொழிலாளர் இணை கமிஷனர் புனிதவதி, வேலூர், ராணிப்பேட்டை, திருப்பத்துார் மாவட்ட தொழிலாளர் உதவி கமிஷனர்கள் (சமூக பாதுகாப்பு திட்டம்) மற்றும் தொழிற்சங்க தரப்பு பிரதிநிதிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### சென்னை குடிநீர் வாரியம் சார்பில்

# அனைத்து மண்டலங்களிலும் குறைதீர்க்கும் கூட்டம்!

## சென்னை குடிநீர் வாரியம் அறிவிப்பு!

சென்னை, நவ.10-

சென்னைக் குடிநீர் வாரிய குறை தீர்க்கும் கூட்டம் 11.11.2023 (சனிக்கிழமை) அன்று குடிநீர் வாரிய 15 பகுதி அலுவலகங்களில் நடைபெறும்.

சென்னைக் குடிநீர் வாரியம் சார்பில், குறை தீர்க்கும் கூட்டங்கள் இரண்டாவது சனிக்கிழமைகளில் நடத்தப்பட்டு வருகிறது. இம்மாதத்திற்கான குறை தீர்க்கும் கூட்டம் 11.11.2023 (சனிக்கிழமை) அன்று காலை 10.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை குடிநீர் வாரிய அனைத்து பகுதி அலுவலகங்களில் நடைபெறும்.

இந்த குறை தீர்க்கும் கூட்டம் நடைபெறும் பகுதி அலுவலகங்கள் விபரம்:

பகுதி அலுவலகம் - 1- திருவொற்றியூர், பகுதி அலுவலகம் -2 - மணலி, பகுதி அலுவலகம் - 3 - மாதவரம், பகுதி அலுவலகம் - 4 - தண்டையார்பேட்டை, பகுதி அலுவலகம் - 5 - இராயபுரம், பகுதி அலுவலகம் - 6 - திரு.வி.க.நகர், பகுதி அலுவலகம் - 7 - அம்பத்தூர், பகுதி அலுவலகம் - 8 - அண்ணா நகர், பகுதி அலுவலகம் - 9 - தேனாம்பேட்டை, பகுதி அலுவலகம் -10 - கோடம்பாக்கம், பகுதி அலுவலகம் - 11 - வளசரவாக்கம், பகுதி அலுவலகம் - 12 - ஆலந்தூர், பகுதி அலுவலகம் - 13 - அடையாறு, பகுதி அலுவலகம் - 14 - பெருங்குடி, பகுதி அலுவலகம் - 15 - சோழிங்கநல்லூர்.

இந்த குறை தீர்க்கும் கூட்டங்கள் வாயிலாக பொதுமக்கள் பயன்பெற வேண்டும் என்பதற்காக ஒவ்வொரு பகுதி அலுவலகங்களிலும் ஒரு மேற்பார்வைப் பொறியாளர் தலைமையில் இக்கூட்டம் நடைபெறும்.

எனவே, இந்த குறை தீர்க்கும் கூட்டத்தில் பொதுமக்கள் பங்கேற்று குடிநீர், கழிவுநீர் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள், குடிநீர், கழிவுநீர் வரி மற்றும் கட்டணங்கள், நிலுவையில் உள்ள குடிநீர், கழிவுநீர் புதிய இணைப்புகள் தொடர்பான சந்தேகங்களை நேரில் மனுக்கள் வாயிலாக தெரிவித்து பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும், மழைநீர் சேகரிப்பு மற்றும் பராமரிப்பு தொடர்பான விளக்கங்களையும் இக்கூட்டத்தின் வாயிலாக தெரிந்து கொள்ளலாம்.



இராணிப்பேட்டை, வேலூர் மற்றும் திருப்பத்தூர் மாவட்டங்களில் உள்ள தோல் உற்பத்தி தொழிலாளர்களின் தற்போது உள்ள நிலைகளை நேரில் ஆய்வு செய்து தொழிலாளர்களின் பயனாளிகளுக்கு அரசு திட்ட உதவிகளையும் அரசு அடையாள அட்டைகளையும் தோல் உற்பத்தி தொழிலாளர் நலவாரிய தலைவர் நெல்லிக்குப்பம் புகழேந்தி நேரில் வழங்கினார்.







